தினத்தளம்
PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
www.dhinathdhalam.com
ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 138 | சனிக்கிழமை Saturday | 15.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# வருவாய் மேம்பாட்டுக் குழுவினர் முதலமைச்சர் விஜய்யுடன் ஆலோசனை




பொருளாதார நிபுணர் மாண்டேக் சிங் அலுவாலியா தலைமையிலான வருவாய் மேம்பாட்டுக் குழுவினர் முதல்வர் விஜய்யை தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

தமிழகத்தின் வரி மற்றும் வரி அல்லாத வருவாயை அதிகரிக்கவும், வருவாய் கசிவுகளை தடுத்து நிதி ஆதாரங்களை மேம்படுத்தவும் வருவாய் மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதன் தலைவராக மத்திய திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவரும், பொருளாதார நிபுணருமான மாண்டேக் சிங் அலுவாலியா நியமிக்கப்பட்டார். உறுப்பினர்களாக பேராசிரியர் கே.பி. கிருஷ்ணன், வரிக் கொள்கை நிபுணர் அரவிந்த் மோடி, முன்னாள் ஐஆர்எஸ் அலுவலர் நஜீப் ஷா, நிதித்துறை செயலர் எம்.ஏ.சித்திக், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் எம்.சுரேஷ் பாபு ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழு மாநிலத்தின் சொந்த வரி வருவாயை அதிகரிப்பதற்கான புதிய வழிமுறைகள், வரியல்லாத வருவாயை உயர்த்தும் திட்டங்கள், புதிய வருவாய் ஆதாரங்களை கண்டறிதல், வருவாய் இழப்புகளை தடுக்கும் சீர்திருத்தங்கள் குறித்த ஆலோசனைகளை தமிழக அரசுக்கு 3 மாதங்களில் வழங்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாண்டேக் சிங் தலைமையிலான குழுவினர் முதல்வர் விஜய்யை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்தனர்.

அப்போது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப வருவாயை சீரமைக்க வேண்டியதன் அவசியம் மற்றும் வருவாய் ஆதாரங்களை வலுப்படுத்துவது தொடர்பாக விவாதிக்கப்பட்டதாகவும், செயல் திட்ட அறிக்கை தயாரிப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. நிதியமைச்சர் மரியவில்சன், தலைமைச் செயலர் எம்.சாய்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மேலும், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிலங்கள் மற்றும் பிற சொத்துகளை பயனுள்ள முறையில் பணமாக்குவது, பொதுத்துறை நிறுவனங்களின் லாப பங்குகளை அதிகரிப்பது, பயனாளர் கட்டணங்களை மறுஆய்வு செய்வது உள்ளிட்டவை குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு அரசுக்கு பரிந்துரைகளை வழங்க உள்ளது.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் மாண்டேக் சிங் தலைமையிலான குழுவினர் முதலமைச்சர் விஜய்யை இன்று சந்தித்து ஆலோசனை நடத்தினர். முதலமைச்சருடனான இந்த முதல் சந்திப்பு சுமார் 30 நிமிடங்களுக்கும் மேலாக நீடித்தது. அப்போது மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ப வருவாயை சீரமைக்க வேண்டியதன் அவசியத்தையும், வள ஆதாரங்களை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

முன்னதாக மான்டேக் சிங் அலுவாலியா தலைமையிலான குழுவின் முதல் கூட்டம், சென்னை நந்தனத்தில் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கட்டடத்தில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில், மாநிலத்தின் முக்கிய வருவாய் ஈட்டும் துறைகளான வணிக வரிகள், பதிவுத்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், போக்குவரத்துத் துறை, புவியியல் மற்றும் சுரங்கத் துறை, நீர்வளத் துறை, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், நகர் ஊரமைப்பு இயக்ககம் மற்றும் பொதுத் துறை மாநிலக் கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்று விரிவான விளக்கம் வருவாய் தொடர்பாக அளித்தனர்.




# கரூர் சம்பவம்: அரசு பணியை எதிர்த்த மனுதாரருக்கு சுப்ரீம் கோர்ட் சரமாரி கேள்வி; ஐகோர்ட் உத்தரவுக்கு இடைக்கால தடை





கரூரில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்தச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுதொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடத்த ஐகோர்ட்டு உத்தரவிட்டது. சம்பவம் தொடர்பாக பலரிடம் சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டுள்ளது.

இந்த நிலையில், கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்குவதற்கான நியமன ஆணைகள் கடந்த மாதம் 10-ந்தேதி வழங்கப்பட்டன. இதை எதிர்த்து நாம் தமிழர் கட்சியின் மீனவர் பாசறை நிர்வாகி தீரன் திரு முருகன், மதுரையைச் சேர்ந்த சீனி முகமது, திண்டுக்கல் மாவட்டம் வேட சந்தூரைச் சேர்ந்த சந்தோஷ் குமார் ஆகியோர் சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளையில் மனுக்கள் தாக்கல் செய்தனர். இந்த மனுக்களை விசாரித்த ஐகோர்ட்டு, கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்கியதற்கான அரசாணையை ரத்து செய்து கடந்த மாதம் 27-ந்தேதி உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் ஜே.பி.பார்த்திவாலா, கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு பணி வழங்கியதில் உங்களுக்கு என்ன பிரச்சினை? அரசு பணி வழங்கக் கூடாது என்று கூற நீங்கள் யார்? என்று மனுதாரரிடம் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் என்பது துயரமான நிகழ்வு, இதில் அரசியல் செய்யக்கூடாது என்று கூறியதோடு ஐகோர்ட் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டது.

# விவசாயிகள் சம்பா சாகுபடி செய்யத் தேவையான நீரை கர்நாடகத்தில் இருந்து பெற வேண்டும்; எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்



தஞ்சாவூர்: "தமிழக அரசு கும்பகர்ணனைப் போல் தூங்காமல் விழிப்போடு இருந்து விவசாயிகள் சம்பா சாகுபடி செய்யத்தேவையான நீரை கர்நாடகத்தில் இருந்து பெறவேண்டும்," என்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

தஞ்சாவூரில் அதிமுக சார்பில் பொதுச் செயலாளர் கே.பழனிசாமி தலைமையில் இன்று காலை, தவெக அரசின் தேர்தல் வாக்குறுதிபடி முழுமையான பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், குறுவை சாகுபடி செய்து, தண்ணீர் இல்லாமல் நெற்பயிர் கருகி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும், கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்டுவதை தமிழக அரசு தடுக்கத் தவறியதை கண்டித்தும், ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பேசிய பழனிசாமி, "தமிழகத்தின் நெற்களஞ்சியமான, பொன் விளையும் பூமியான தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள் தண்ணீர் இல்லாமல், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. காரணம், வழக்கமான ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால். இந்த ஆண்டு ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. புதிதாக ஆட்சிக்கு வந்த தவெக அரசு, தண்ணீரை கர்நாடகத்திடமிருந்து பெற்று விவசாயிகளுக்கு வழங்க ஆர்வம் காட்டவில்லை.

இந்த அரசு ரீல்ஸ் மோகத்தில் மூழ்கியுள்ளது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மாதந்தோறும் கர்நாடக அரசு வழங்க வேண்டிய தண்ணீரை, தமிழக அரசு கேட்டுப் பெறவில்லை, இதனால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் டெல்டாவில் 5.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில், நிலத்தடி நீர் மட்டத்தை நம்பி 2 லட்சம் ஏக்கரில் சாகுபடி செய்தனர். அதற்கும் மும்முனை மின்சாரம் போதிய அளவு வழங்காத காரணத்தால் சுமார் 1 லட்சம் ஏக்கரில் நெற்பயிர் பாதிக்கப்பட்டு கருகிவிட்டது. எனவே, பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் நிவாரணத்தை தமிழக அரசு வழங்க வேண்டும். அதிமுக ஆட்சிக் காலத்தில் விவசாயிகளின் நன்மையைக் கருதி ரூ.12,110 கோடி பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ஒரே குடும்பத்தில் மூன்று பேர் கடன் பெற்றிருந்தாலும் அனைவருக்கும் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் தற்போதைய நடைமுறையில், குறைந்த கடன் தொகை பெற்ற ஒருவருக்கு மட்டுமே தள்ளுபடி கிடைக்கும் நிலை உள்ளது.

தேர்தல் நேரத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியின்படி சிறு, குறு விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாகவும், 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளின் பயிர்க்கடனில் 50 சதவீதத்தையாவது உடனடியாகத் தள்ளுபடி செய்யவேண்டும். காவிரி நீர் விவகாரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி ஆண்டுதோறும் 177.25 டிஎம்சி நீரை கர்நாடகம் வழங்க வேண்டும்.

தமிழக அரசு உடனடியாக அனைத்துக்கட்சி கூட்டத்தைக் கூட்டி, விவசாயிகள் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசித்து தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட வேண்டும். கர்நாடகா அரசு மேகேதாட்டு அணைக் கட்டுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



### கோவையில் சுற்றுலாத் துறை குறித்து சர்வதேச மாநாடு 2026

## ஆகஸ்ட் 12 முதல் 15ம் தேதி வரை நடைபெறும் தேசிய மாநாட்டில் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுற்றுலா துறையை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்பு



ஸ்கால் இன்டர்நேஷனல் கோயம்புத்தூர் சார்பில், சுற்றுலாத் துறையினரின் தேசிய மாநாடான ஸ்கால் இந்தியாதேசிய மாநாடு 2026 தொடங்கியது. ஆகஸ்ட் 12முதல் 15-ம்தேதிவரை கோவை லீ மெரிடியன் ஹோட்டலில் நடைபெறும் இம்மாநாட்டில் இந்தியா முழுவதும் உள்ள சுற்றுலாத் துறை சார்ந்தோர் மற்றும் பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.

நிகழ்ச்சியினைதமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைஅமைச்சர்வி. சம்பத் குமார், தமிழ்நாடு அரசு சுற்றுலா த்துறை அமைச்சர் எஸ்.ராஜேஷ் குமார், ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் ஸ்கால் இன்டர்நேஷனல் இந்தியாவின் தலைவர் சஞ்சீவ் மெஹ்ரா, ஜிடி குழுமத்தின் நிர்வாக இயக்குநர் ஜி.டி. ராஜ்குமார், ஸ்கால் இன்டர்நேஷனலின் 2027ஆம் ஆண்டிற்கான தலைவராகத் தேர்வான என். எஸ்.என். மோகன், தென்னிந்திய ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்கத்தின் செயல்பாட்டு இயக்குநர் சுந்தர் சிங்காரம், ஸ்ரீ ராமகிருஷ்ணா சுகாதார மற்றும் கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் சுந்தர் ராமகிருஷ்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் ஜி. கிரியப்பனவர், என பலர் கலந்து கொண்டனர்.

கோவையில் முதல்முறையாக இந்த தேசிய மாநாடு நடைபெறுகின்றது. நான்கு நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஸ்கால் உறுப்பினர்கள், சுற்றுலாத் துறை வல்லுநர்கள் மற்றும் தொழில்துறை சார்ந்த முக்கியப் பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தனர்.

சுற்றுலாத் துறையின் எதிர்காலம், புதிய வாய்ப்புகள், தொழில் உறவுகள் மற்றும் கருத்துப் பரிமாற்றம் குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது எனவும், இந்த ஆண்டுக்கான மாநாட்டில் நிலைத்தன்மை மற்றும் பாரம்பரியம் ஆகியவை முக்கிய கருப்பொருள்களாக இடம்பெறுகின்றன. சுற்றுலாத் துறையை பொறுப்புடன் வளர்ப்பதுடன், ஒவ்வொரு சுற்றுலாத்தலத்தின் கலாச்சாரம், சுற்றுச்சூழல் மற்றும் பாரம்பரிய வளங்களைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் மாநாட்டில் கவனம் செலுத்தப்பட உள்ளது.

### 24 கேரட் தங்க முலாம் பூசப்பட்ட நகைகளுக்கான இந்தியாவின் முதல் பிரீமியம் ப்ராண்டாக திகளும்

## மந்தாரா கோவை ஆர்.எஸ்.புரம் பகுதியில் அழகிய பிரம்மாண்ட நகைகளுக்கான புதிய கிளையாக துவக்கப்பட உள்ளது



நகை தயாரிப்பில் 26 ஆண்டுகளுக்கும் மேலான நிபுணத்துவத்தை கொண்டுள்ள, மந்தாரா நிறுவனம்,பைன்கோல்ட் வெர்மெயில் எனும் 24 காரட்தங்கமுலாம்பூசப்பட்ட நகைகளுக்கான புதிய கிளையை கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் வரும் 17ம் தேதி திறக்க உள்ளது. இதனை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தலைவர் கிருஷ்ணன் திறந்து வைக்க உள்ளார் இதற்கான விளம்பர வெளியீட்டு விழா நிகழ்ச்சி கோவை பாப்பநாய்க்கன் பாளையத்தில் உள்ள தனியார் உணவக அரங்கில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து இது குறித்து மந்தாரா நிறுவனத்தின் உரிமையாளர் பினுகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது.. கோவை விமான நிலையத்தில் ஏற்கனவே எங்களுக்கு ஒரு கிளை உள்ளது. எங்களின் இரண்டாவது கிளை வரும் 17ம் தேதி கோவை ஆர் எஸ் புரம் பகுதியில் திறக்க பட உள்ளது.

நகை தயாரிப்பில் சுமார் 26 ஆண்டுகள் தனக்கு அனுபவம் உள்ளது என்றார். மந்தாரா நகைகள் திறமையான கைவினைகலைஞர்களின், தயாரிப்பில் உருவாக்கபட்ட 24காரட்தங்க முலாம் பூசப்பட்ட, அழகிய நெக்லஸ்கள், வளையல்கள், மோதிரங்கள், கம்மல்கள், ஜிமிக்கிகள், பிரேஸ்லெட்கள், திருமண நகைகள், பேஷன் நகைகள், உள்ளிட்ட கலெக்ஷன்கள் தயாரிக்க பட்டு விற்பனை செய்ய படுகின்றது. மேலும் உங்களது பூஜை அறையில் வைப்பதற்கான தெய்வங்களின் சிலைகள் தத்ரூபமாக தங்க முலாம் பூசப்பட்டு வடிவமைக்க பட்டுள்ளது என்றார். தொடர்ந்து உயர்ந்து வரும் தங்கத்தின் விலை உயர்வால் பலதரப்பட்ட பெண்களும், கவரிங் நகைகளுக்கு விருப்பம் தெரிவித்து வரும் நிலையில், கவரிங் நகைகளை அணிவதால், அலர்ஜி, அரிப்பு, மற்றும் கருத்து போதல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் நிலை இருந்து வருகின்றது. இவற்றை கருத்தில் கொண்டு இந்த வகை நகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளது, இது கருக்காது, தோலில் அறிப்பை ஏற்படுத்தாது, நீடித்ததரத்தைவழங்கும் கவரிங் நகைகளாக அமைந்துள்ளது இதனால் இது பெண்களின் வரப்பிரசாதமாக இந்த வகை நகைகள் அமையும் என்று தெரிவித்தார். இந்த செய்தியாளர்கள் சந்திப்பின் பொழுது மந்தாரா நிறுவனத்தின் இணை நிறுவனர் ஸ்ருதி பினு குமார் உடனிருந்தார்.

## கோவை உப்பிலிபாளையம் பகுதியில் நடைபெற்ற ஆன்மீக சொற்பொழிவு மற்றும் தியான நிகழ்ச்சி

### பரமஹம்ச யோகானந்தரால் தொடங்கப்பட்ட அமைப்பு ஏற்பாடு செய்தது



ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரால் 1917-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட 'யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியா' சார்பில், கோவையில் ஆன்மீக சொற்பொழிவு மற்றும் தியானநிகழ்ச்சிதுவங்கியது.

கோவை உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், . மகிழ்ச்சியான மற்றும் வளமான வாழ்விற்கான திறவுகோல்' என்ற தலைப்பிலான ஆன்மீக நிகழ்ச்சி நடைபெற்றது. யோகதா சத்சங்க சொஸைடி ஆஃப் இந்தியாவின் மூத்த சன்னியாசி சுவாமி ஸ்மரணானந்த கிரி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

மூன்று நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் கீர்த்தனை, தியானம், சுவாசப் பயிற்சி மற்றும் சத்சங்கம் ஆகியவை நடைபெற உள்ளன. இதில் கலந்துகொள்ள அனுமதி முற்றிலும் இலவசம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின் ஒரு முக்கிய பகுதியாக, உலகப் புகழ்பெற்ற 'ஒரு யோகியின் சுயசரிதம்' என்ற நூலின் பதிப்பு வெளியிடப்பட்டது.

வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று நாள் தியான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. இதில் சத்சங்கம், தியானம், ஒய்.எஸ்.எஸ் தியான உத்திகள் மற்றும் "எப்படி வாழவேண்டும்"என்பதற்கான வாழ்க்கை முறை போதனைகள் கற்றுத்தரப்படும். ளுக்கான ஏற்பாடுகளை கோவை, திருச்சி ரோடு பெர்க்ஸ் பள்ளி வளாகம் அருகில் உள்ள 'யோகதா சத்சங்க தியான கேந்திரா' செய்துள்ளது. தியானப் பயிற்சியின் மூலம் மனதை ஒருமுகப்படுத்துவதுடன்,அன்றாட வாழ்க்கையில்ஏற்படும் சவால்களை அமைதியான மனநிலையுடன் எதிர்கொள்ள முடியும் என சுவாமிகள் எடுத்துரைத்தார்.

மேலும், கிரியா யோகத்தின் அடிப்படைகள், தியானத்தின் பயன்கள் மற்றும் ஆன்மிகப் பயிற்சியை அன்றாட வாழ்க்கையுடன் இணைத்துக் கொள்வதில் ஆண்கள்,பெண்கள்,இளம் தலைமுறையினர் என பேதமில்லாமல் அனைவரும் தியானத்தை பின்பற்றினால் மனஅமைதிகிடைக்கும் என அவர் கூறினார்.



### தூத்துக்குடியில் பசுமை இயக்கம் வேகம் சார்பில்

## 5 லட்சம் பனை விதைகள் மற்றும் 5,000 மரக்கன்றுகள் நடும் பணியை அமைச்சர் ஸ்ரீநாத் தொடக்கி வைத்தார்

தூத்துக்குடி மாநகராட்சி உரக்கிடங்கு வளாகத்தில் 5,000 மரக்கன்றுகள் மற்றும் 5 லட்சம் பனை விதைகள் நடும் பணியை அமைச்சர் ஸ்ரீநாத் தொடங்கி வைத்தார்.

தூத்துக்குடி மாநகராட்சி தருவைகுளம் உரக்கிடங்கு வளாகத்தில் பசுமைத் தமிழ்நாடு இயக்கம் மற்றும் நகர்ப்புற பசுமையாக்கல் திட்டத்தின் கீழ் 5,000 மரக்கன்றுகள் மற்றும் 5 லட்சம் பனை விதைகள் நடும் நிகழ்வு இன்று நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன் தலைமை வகித்தார். மாநகராட்சி ஆணையர் சி.பிரியங்கா முன்னிலை வகித்தார். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகள் மற்றும் பனை விதைகள் நடும் பணியைத் தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில், "2019 முதல் 2026 வரை தருவைகுளம் உரக்கிடங்கு வளாகத்தில் 206 ஏக்கர் பரப்பளவில் 1,87,800 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாநகராட்சியின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மண்டலப் பகுதிகளில் இதுவரை 32,373 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை 2,20,173 மரக்கன்றுகள் நடப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மரங்களின் பங்கு முக்கியமானது. பொதுமக்கள் அனைவரும் தங்கள் வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்க வேண்டும். "மரம் நடுவோம், வளம் பெறுவோம்" என்று அமைச்சர் ஆ. ஸ்ரீநாத் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அய்யனார், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் முனிரஹமது, உதவிப் பொறியாளர்கள் ராஜேஷ்கண்ணன், காந்திமதி, ஸ்டாலின் பாக்கியநாதன், ராஜபாண்டி மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாநகராட்சிப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

## எஃப்.சி.ஆர்.ஏ. (FCRA) சட்டம் வெளிநாட்டு நிதியை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமே தவிர, NGOக்களை கட்டுப்படுத்தும் சட்டமல்ல - டாக்டர் சுதா விளக்கம்



எஃப்.சி.ஆர்.ஏ (FCRA) எனப்படும் Foreign Contribution (Regulation) Act சட்டம், இந்தியாவில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் மற்றும் NGO-க்களை பொதுவாக கட்டுப்படுத்துவதற்கான சட்டம் அல்ல என்றும், வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதி மற்றும் பங்களிப்புகள் முறையாகவும் வெளிப்படையாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கம் என்றும் பா.ஜ.க. கார்யகர்த்தா டாக்டர் சுதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வரும் நன்கொடைகள் எந்த நோக்கத்திற்காக பெறப்படுகின்றன, அவை எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன, அதற்கான கணக்குகள் முறையாக பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணித்து ஒழுங்குபடுத்துவதே FCRA சட்டத்தின் அடிப்படை நோக்கம் என தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் செயல்படும் ஒரு NGO-வுக்கு பொதுமக்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட உள்நாட்டு ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் நன்கொடைகள் பொதுவாக FCRA-வின் கீழ் வெளிநாட்டு பங்களிப்பாகாது. அதே அமைப்புக்குஅமெரிக்கா,இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா உள்ளிட்ட வெளிநாடுகளில்இருந்துநிதிகிடைத்தால், அந்த நிதி FCRA விதிகளுக்கு உட்படும்.

உதாரணமாக, இந்தியாவில் இருந்து பெறப்படும் ரூ.20 லட்சம் நன்கொடை உள்நாட்டு நிதியாகும். அதே அமைப்புக்கு அமெரிக்காவில் உள்ள தொண்டு நிறுவனம் ரூ.50 லட்சம் வழங்கினால், அது வெளிநாட்டு பங்களிப்பாக கருதப்படும். அந்த நிதியைப்பெறவும்பயன்படுத்தவும் FCRA சட்ட விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

வெளிநாட்டு நிதி மருத்துவ உதவி, கல்வி உதவி, பேரிடர் நிவாரணம் உள்ளிட்ட சட்டப்படி அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படவேண்டும். அனுமதிக்கப்பட்ட நோக்கத்திற்கு மாறாக நிதி பயன்படுத்தப்பட்டால், அது சட்டரீதியான பிரச்னைகளுக்கு வழிவகுக்கும்.

வெளிநாட்டு பங்களிப்பைப் பெறும் அமைப்புகளின் தகுதியை ஒழுங்குபடுத்துதல், பதிவு மற்றும் முன் அனுமதி நடைமுறைகளை வகுத்தல், நிதியின் வரவு-செலவு குறித்த கணக்குகளை உறுதி செய்தல் மற்றும் விதிமீறல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வழிவகுத்தல் ஆகியவை FCRA சட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

ஒரு NGO சமூக சேவை, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்கிறது என்பதற்காக மட்டும் FCRA அந்த அமைப்பை கட்டுப்படுத்துவதில்லை. வெளிநாட்டு பங்களிப்பை பெறும்போது, அந்த நிதியின் வரவு மற்றும் பயன்பாட்டை சட்ட விதிகளுக்கு உட்படுத்துவதே FCRA-வின் நோக்கம் என அவர் விளக்கமளித்துள்ளார்.

மேலும், ஒரு அமைப்பின் FCRA பதிவு ரத்து செய்யப்பட்டாலோ அல்லது வெளிநாட்டு நிதி பெறுவதற்கான அனுமதி இல்லாத நிலை ஏற்பட்டாலோ, அந்த அமைப்பின் அனைத்து சமூகப் பணிகளும் தானாகவே சட்டவிரோதமாகிவிடும் என்று அர்த்தமல்ல. வெளிநாட்டு பங்களிப்பைப் பெறுவதற்கான FCRA விதிகளை பின்பற்ற முடியாத நிலையே ஏற்படும். சட்டப்படி அனுமதிக்கப்பட்ட உள்நாட்டு நிதி ஆதாரங்கள் மூலம், பிற சட்டங்களுக்கு உட்பட்டு சமூகப் பணிகளை தொடர முடியும்.

எனவே, FCRA என்பது NGO-க்களை ஒடுக்குவதற்கான சட்டம் அல்ல; வெளிநாட்டு பங்களிப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம். வெளிநாட்டு நிதியின் வரவு, பயன்பாடு, கணக்குப்பதிவு மற்றும் சட்டப்பூர்வத்தன்மையில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதே இதன் அடிப்படை நோக்கம் என டாக்டர் சுதா தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடியில் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் ம.தி.மு.க. சார்பில் பொதுமக்கள் கோரிக்கைகள் மனு



தூத்துக்குடி மாவட்ட ம.தி.மு.க.சார்பில் நடைபெற்ற மின் நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டத்தில் பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகள் மற்றும் குறைகள் தொடர்பான மனுக்கள் அளிக்கப்பட்டன.

மாநகரச் செயலாளர் முருக பூபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மாநில வெளியீட்டு அணிச் செயலாளர் நக்கீரன், மாவட்ட பிரதிநிதி பொன்ராஜ் மகாராஜன் உள்ளிட்ட ம.தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் மின்சாரம் தொடர்பான பல்வேறு பிரச்னைகள் மற்றும் குறைகள் குறித்து அதிகாரிகளிடம் எடுத்துரைக்கப்பட்டதுடன், அவற்றுக்கு உரிய தீர்வு காண வலியுறுத்தி மனுக்கள் வழங்கப்பட்டன.

பொதுமக்களின் கோரிக்கைகளை பரிசீலித்து, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ம.தி.மு.க. சார்பில் வலியுறுத்தினர்.

# தூத்துக்குடி மாவட்ட செயலாளர் புதிய பொறுப்பேற்ற அமைச்சர் ஸ்ரீநாத்தை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்த வழக்கறிஞர் சி.மந்திரமூர்த்தி



தூத்துக்குடி: தமிழக வெற்றிக் கழகத்தின் தூத்துக்குடி மத்திய மாவட்ட செயலாளராக பொறுப்பேற்றுள்ள தமிழக மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத், தமிழகவெற்றிக்கழகமாநில துணைச் செயலாளர் எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ், தமிழக வெற்றிக் கழக நிர்வாகி கிஷோர், மாவட்ட இணைச் செயலாளர் அண்ணன் கோல்டன் மற்றும் தூத்துக்குடி மத்திய மாவட்ட நிர்வாகிகள் ஆகியோரை, தூத்துக்குடி மத்திய மாவட்ட வழக்கறிஞர்கள் சார்பில் சி.மந்திரமூர்த்தி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.

பின்னர் புதிதாக பொறுப்பேற்றுள்ள மாவட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த சி.மந்திரமூர்த்தி, தமிழகவெற்றிக்கழகத்தின் வளர்ச்சிக்கும், மக்கள் நலப் பணிகளுக்கும் தொடர்ந்து சிறப்பாக செயல்பட வேண்டும் என வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது தூத்துக்குடி மத்திய மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞர்கள் உடனிருந்தனர்.



# ஆற்காட்டில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம்

ஏ.பி.ஜெ. அறக்கட்டளை மற்றும் எஸ்.எம். மருத்துவமனை சார்பில், அறக்கட்டளை தலைவர் கோபி ஏற்பாட்டில் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

முகாமிற்கு ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எம். சுகுமார் தலைமை வகித்தார். இதில் 200-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கண் பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு, தேவையான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை பெற்றுச் சென்றனர். முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக வணிகர் சங்கத் தலைவர் பொன்.கு.சரவணன்,நகர கழக செயலாளர் ஜிம் சங்கர், வாலாஜா நகராட்சி உறுப்பினர் வா. கோ. முரளி, பூவரசன் எம்.சி., தொழிலதிபர்கள் கணேஷ், தங்கபாண்டியன்,சமூகஆர்வலர்ரவிசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றனர்.

## போதை பொருள் இல்லாத தமிழ்நாடு

# நல்லூர் சிஎஸ்ஐ ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் மாணவ மாணவிகள் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு



தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச ஜோசப் விஜய் அவர்கள் தலைமையில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் சென்னையில் காணொளி வாயிலாக *போதை பொருள் இல்லாத தமிழ்நாடு* என்ற தலைப்பில் மாநில அளவிலான உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது அதனோடு இணைந்து தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே நல்லூர் சிஎஸ்ஐ ஜெயராஜ் அன்ன பாக்கியம் கல்லூரியில் தாளாளர் திரு. ஜேசு ஜெகன் தலைமையில் கல்லூரி முதல்வர் முனைவர் வில்சன் முன்னிலையில் அனை த்துத் துறை கல்லூரி மாணவ மாணவிகள், பேராசிரியர்கள் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆலங்குளம் காவல் ஆய்வாளர் திரு.சாகுல்ஹமீதுசிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை கல்லூரி போதை எதிர்ப்பு சங்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் திரு.வேல்குமார் செய்திருந்தார். நிகழ்வில் திரளானோர் கலந்து கொண்டனர்

# ஈரோடு அதிமுக 15வது வட்ட கழக செயலாளராக காவேரி முருகன் நியமனம்

ஈரோடு மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட அதிமுக 15-வது வட்ட கழக செயலாளராக காவேரி முருகன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமை கழகத்தின் வாயிலாக அறிவித்த இந்த நியமனத்தை தொடர்ந்து, புதிய பொறுப்பேற்றுள்ள காவேரி முருகன் கட்சி தலைவர்கள் மற்றும் மூத்த நிர்வாகிகளை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தன்னை 15-வது வட்ட கழக செயலாளராக நியமித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமிக்கும், தனது பெயரினை பரிந்துரை செய்து ஆதரவளித்த ஈரோடு மாநகர் மாவட்ட கழக செயலாளர் பெரியார்நகர் இரா. மனோகரனுக்கும் காவேரி முருகன் நேரில் சென்று தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.



இதனைத் தொடர்ந்து, அதிமுக மாநில கொள்கைபரப்புதுணைச் செயலாளரும், ஈரோடு மாநகராட்சி முன்னாள் துணை மேயருமான கே.சி.பழனிச்சாமி மற்றும் ஈரோடு கே.எஸ். தென்னரசு ஆகியோர்களை மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்து பெற்றார். நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர். கழகத்தின் வளர்ச்சிக்கும், ஆற்றலாற்றுவதாக காவேரி முருகன் உறுதி எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

# குடிபோதையில் தனியார் பேருந்தை வழிமறித்த அதிமுக கொடி கட்டிய காரில் வந்த கட்சி நிர்வாகிகள்

கிருஷ்ணகிரி மாவட்டம் சாமல்பட்டி அருகே தனியார் பேருந்துதை வழிமறித்து ஓட்டுனரை தாக்க முயன்ற ஆஇஅதிமுக கட்சியில் நிர்வாகிகள் தங்களதுமேலிடம்விடுத்துள்ள கட்டளையின்படி இன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுமக்களுக்கு குறை இருக்கிறது என்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் இந்த ஆர்ப்பாட்டம் முடித்துவிட்டு வரும்போது சாமல்பட்டி அருகேதனியார்பேருந்தை வழிமறைத்து ஓட்டுநரை தாக்க முயற்சித்துள்ளார்கள் பொதுமக்கள் இவர்களைபிடிக்க வேண்டும்என்று பேருந்து விட்டு இறங்கும்போது இவர்கள் நாங்களும் உள்ளூர் தான் நீங்கள் எப்படி பேருந்து இயக்குகிறீர்கள் என்று பார்க்கிறோம் நாங்களும் ஊத்தங்கரை பகுதியை சேர்ந்தவர்கள் தான் என்று சொல்லிவிட்டு இவர்கள் கொண்டு வந்த கார் எண்TN83 A 3535 என்றகாரின்மூலம்காரின் மூலம்தப்பி ஓடி விட்டார்கள் கட்சித் தலைமை இவர்களுக்கு சொல்லிக் கொடுக்கும் பண்பாடு இதுதானா என்று பொதுமக்கள் கேள்வி கேட்டு வருகின்றனர்

இதற்கு முன்னால் மாபெரும் இயக்கமான ஆஇ அதிமுக கட்சியை மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் எப்படி வழிநடத்தி கொண்டுசென்றார்என்று மக்களுக்கு தெரியும் ஆனால் தற்போது இருக்கும் தலைமை இவர்களை ரவுடிகளாக உருவாக்கி பொதுமக்களை அச்சுறுத்தும்செயலில் ஈடுபட்டு வருகிறார்கள் எனவே கட்சி தலைமையும் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்தமிழக அரசும் காவல் துறையையின் மூலம் கடுமையான நடவடிக்கை இவர்கள் மீது எடுக்க வேண்டும் என்று அச்சத்தில் இருக்கும் பொதுமக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# ஜிபே மூலம் பணம் பெற்று நூதன மோசடி: சென்னையில் இருவர் கைது

சென்னை கோவூர் ஈஸ்வரன்நகரைச்சேர்ந்தவர் அப்பு (25). தனியார் மருத்துவமனை ஒன்றில் பிசியோதெரபிஸ்டாக வேலை செய்து வருகிறார். கடந்த ஜூன் 8-ம் தேதி மதியம் அசோக் நகர் 19-வது அவென்யூ அருகே உள்ள வங்கி ஏடிஎம் மையத்தில் பணம் எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். அப்போது ஏடிஎம் மையத்துக்கு வந்த 2 இளைஞர்கள், தங்களது ஏடிஎம் கார்டு வேலை செய்யவில்லை என்றும், அவசரமாக ரொக்கப் பணம் தேவைப்படுவதாகவும் கூறினர்.



மேலும், ரூ.1,500 கொடுத்தால் உடனடியாக ஜிபே மூலம் பணத்தை அனுப்பி விடுவதாக தெரிவித்தனர். இதை நம்பி, இரக்கப்பட்டு அப்பு,அவர்களிடம் ரூ.1,500 கொடுத்தார். பின்னர் அவர்கள் அப்புவின் கியூ.ஆர். கோடை ஸ்கேன் செய்து, செல்போனில் பணம் அனுப்பியதற்கான சத்தம் வந்ததாக கூறிவிட்டு, பைக்கில் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இதையடுத்து தனது வங்கிக் கணக்கை சரிபார்த்தபோது, அந்த இளைஞர்கள் பணம் அனுப்பாமல் ஏமாற்றியது தெரியவந்தது. அதிர்ச்சி அடைந்த அப்பு இது தொடர்பாக கே.கே.நகர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக ஏடிஎம் மையத்தில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

இதில், இந்த நூதன மோசடியில் ஈடுபட்டது கோடம்பாக்கம் சூளைமேடு நெடுஞ்சாலைப் பகுதியைச் சேர்ந்த ஷாஜித் (21), அதேபகுதி கோபாலமேனன் தெருவைச் சேர்ந்த திருச்செல்வம் (19) என்பது தெரிந்தது. இதையடுத்து, தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் கைது செய்தனர்.

# ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் உழவர் அங்காடியில் தீ விபத்து ஏற்பட்டதால் பரபரப்பு

ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் சுய உதவிக்குழுவினரின் உழவர் அங்காடி செயல்பட்டு வருகிறது. இந்த உழவர் அங்காடியில் இன்று எதிர்பாராத விதமாக திடீர் தீ விபத்து ஏற்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத் துறையினர்,நீண்டநேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை.தீவிபத்து ஏற்பட்டதும் உழவர் அங்காடியில் பணிபுரிந்தவர்கள் உடனடியாக வெளியேறியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.









# மதுரை திருமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் உள்ள அம்மன் கோவில்களில் கடைசி ஆடி வெள்ளியை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம்



மதுரை திருமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் உள்ளஅம்மன்கோவில்களில் இன்று கடைசி ஆடி வெள்ளியை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேக அலங்காரம் நடைபெற்றது. இதில் பால்குடம் எடுத்து 41அடி உயரமுள்ள அம்மனுக்கு பாலபிஷேகம், மலரபிஷேகம் நடைபெற்றது. இதில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

திருமங்கலம் அருகே டி.புதுப்பட்டி கிராமத்தில் ஆயிரம் கண்ணுடையாள் திருக்கோவில் அமைந்துள்ளது. இத்திருக்கோவிலில் அம்மன் சிலை 41 அடி உயரத்தில் கம்பீரமாக அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரம் கண்ணுடையாள் தன்னை நாடி வரும் பக்தர்களின் குறைகளை தீர்த்து வருகிறார். ஆடி மாதத்தில் இத்திருக்கோவிலில் மூன்று நாட்கள் திருவிழா நடைபெறும். ஆயிரம் கண்ணுடையாள் ஆடி மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை கோவிலில் திருவிழா பூக்குழிவைபவம்விமரிசையாக நடைபெற்று தொடர்ந்து இன்று 1008 பால் குடங்களில் அம்மனுக்கு பாலாபிஷேகம் நடைபெற்றது.

திருக்கோவிலுக்கு தமிழகத்தில் மதுரை, விருதுநகர், தேனி, கிருஷ்ணகிரி, ஊட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் மாலை அணிவித்து விரதம் இருந்து செவ்வாடை அணிந்து இருமுடி கட்டி இங்கு வந்து அன்னைக்கு நேர்த்திக்கடன் செலுத்துவார்கள். மேலும் அம்மனுக்கு குடம் குடமாக பால் அபிஷேகம் மற்றும் மலர் அபிஷேகம் செய்யப்பட்டது மேலும் உலக நன்மைக்காகவும் விவசாயம் செழிக்கும் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது மேலும் கலந்துகொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்டபக்தர்களுக்குஅன்னதானம் வழங்கப்பட்டது.



நாட்டின் 80வது சுதந்திர தின விழா நாளை நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது. சுதந்திர தினத்தை ஒட்டி நாடு முழுவதும் பொது இடங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் முக்கியப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் மதுரை சர்வதேச விமான நிலையத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர், மாநில வெடிகுண்டு தடுப்பு குழுவினர், தமிழ்நாடு காவல்துறையினர் தரப்பில் ஐந்து அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு மதுரை விமான நிலையம் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மதுரை விமான நிலையம் சுற்றி 10 இடங்களுக்கு மேல் போலீசார் நிறுத்தப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விமான நிலையத்திற்கு வரும் பயணிகள் மற்றும் அவர்களது உடைமைகள் முழு சோதனைக்கு பின்னரே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். அதேபோல் இருசக்கரம், நான்கு சக்கர வாகனங்களில் வருபவர்களின் வாகனங்கள் வெடிகுண்டு தடுப்பு பிரிவினரின் நவீன கருவிகள் மூலம் சோதனை செய்யப்பட்ட பின்னரே விமான நிலையத்திற்குள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

# 2,050 மாணவர்கள் ஒரே தாளத்தில் அசத்தல்: “இளைய பாரதம் 80” பிரமாண்ட ஜும்பா நிகழ்ச்சி



கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே திருப்பயரில் உள்ள ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிவளாகத்தில், இந்தியாவின் 80-வது சுதந்திர தினம் மற்றும் சர்வதேச இளைஞர் தினத்தை முன்னிட்டு, ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக்குழுமம் சார்பில் "இளைய பாரதம் 80" என்ற தலைப்பில் மாபெரும் ஜும்பா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஜெயப்பிரியாவித்யாலயா கல்விக்குழுமநிறுவனத்தலைவர் சி.ஆர். ஜெயசங்கர் தலைமை வகித்தார். விருத்தாசலம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பாலகிருஷ்ணன் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டார். கின்னஸ் வேர்ல்ட் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் நிறுவனர் சுரேஷ், வடக்குத்து பள்ளி செயலாளர் சிந்து, தலைமை முதல்வர் கேப்ரியல் அந்துவன், முதன்மை நிர்வாக அலுவலர் ராமன் குமாரமங்கலம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக்குழுமத்தின் பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 2,050-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் உற்சாகமாக பங்கேற்றனர். சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில் பல்வேறு வண்ணங்களில் மாணவர்கள் மைதானத்தில் அணிவகுத்து நின்று, இந்தியாவின் ஒற்றுமை மற்றும் இளைஞர்களின் எழுச்சியை பிரதிபலிக்கும் பிரமாண்ட வடிவமைப்பை உருவாக்கினர்.

2,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் இசையின் தாளத்திற்கு ஏற்ப ஒருங்கிணைந்து ஜும்பா நடனமாடினர். நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஒரே நேரத்தில் ஒரே அசைவில் நடனமாடிய காட்சி மைதானத்தில் திரண்டிருந்த பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது., ஒரே சாதனை என்ற நோக்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்காக மாணவர்களுக்கு முன்கூட்டியே தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் அணிவகுப்பு, நிகழ்ச்சி வடிவமைப்பு, நுழைவு மற்றும் வெளியேறும் முறைகள் என அனைத்து ஏற்பாடுகளும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்களின் ஒழுக்கம், ஒற்றுமை, ஒருங்கிணைப்பு மற்றும் தேசப்பற்றை ஒரே நிகழ்வில் வெளிப்படுத்திய இளைய பாரதம் 80 நிகழ்ச்சி, இளைய தலைமுறையின் ஆற்றலை பறைசாற்றும் வகையில் அமைந்ததுடன், கின்னஸ் உலக சாதனை நிகழ்ச்சியாக அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

# Delhi airport, high court, other sensitive locations receive bomb threat ahead of Independence Day



*The Delhi high court on Friday received a bomb threat, a security scare that comes amid tightened security across the city a day before the Independence Day. The threat was received through an email, HT learnt.*

*The email, with the subject line '30 MB Blast at the Delhi High Court', said that the blast would occur at 2.11 pm.*

*Delhi High Court Bar Association (DHCBA) Joint Secretary Kunal Malhotra said the threat appeared to be fake. "All precautions have been taken and necessary measures have been put in place," he added.*

*According to the Delhi Fire Service, bomb threat calls were received for five additional locations – Jamnagar House, Jhandewalan Flatted Factory Complex, MB Saket Office/ DM Office, Terminal 3, IGI Airport and SDM Office, Delhi Cantt. Fire tenders have been dispatched to all these locations, news agency ANI reported.*

*Security beefed up across Delhi*

*Security arrangements have been heightened across the city and other parts of the country in view of Independence Day, which India observes on August 15. Police personnel have been deployed at strategic points, while additional checking is being carried out at entry and exit routes. Security teams are also keeping a close watch on public places and areas that are expected to witness increased movement ahead of August 15.*

*The security measures come ahead of the Independence Day celebrations in the capital, where Prime Minister Narendra Modi is scheduled to address the nation from the Red Fort on August 15.*

*On August 3, the Office of Delhi Mayor received a bomb threat for the eighth time, the Municipal Corporation of Delhi said. The Mayor's Office treated the matter with the utmost seriousness and immediately informed the concerned security agencies and the Delhi Police, following which security protocols were activated and necessary action was initiated, they said.*



கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் / ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தி.ந.வெங்கடேஷ் சத்தியமங்கலம், வி.ஐ.பி. நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சாலைப்பணியினை நேற்று (14.08.2026) ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.



கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை முதன்மைச் செயலாளர் / ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தி.ந.வெங்கடேஷ் கோபிசெட்டிபாளையம், கோட்டுப்புள்ளாம்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று (14.08.2026) ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உட்பட பலர் உள்ளனர்.

# கொண்டபாளையம் போலீசார் நடவடிக்கை எடுக்காததால் விரக்தி: ராணிப்பேட்டை ஆட்சியர் அலுவலகத்தில் பெண் தீக்குளிப்பு முயற்சி!





ராணிப்பேட்டை: நிலத் தகராறு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடைய நபர்கள் மீது காவல்துறையினர் கைது நடவடிக்கை எடுக்காததால் மன உளைச்சலுக்கு ஆளான பெண், ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தீக்குளித்து தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் அடுத்த நந்திமங்களம் கிராமத்தை ஒட்டியுள்ள ராமாபுரத்தைச் சேர்ந்தவர் முரளி (54). இவரது மனைவி சாந்தி (54). இவர் இன்று பிற்பகல் 2 மணியளவில் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்தார்.

திடீரென தான் மறைத்து எடுத்து வந்த பெட்ரோலை தன் மீது ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த அங்கிருந்த பாதுகாப்புப் போலீசார், உடனடியாகச் செயல்பட்டு அவர் மீது தண்ணீரைப் ஊற்றித் தடுத்து நிறுத்தினர்.

தொடர்ந்து, அவரை மீட்டு முதலுதவி சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் வாலாஜா அரசு மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர். ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த இந்தச் சம்பவத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பெரும் பரபரப்பு நிலவியது.

இச்சம்பவம் குறித்து சாந்தியின் மகன் ஜெகதீஷ் கூறுகையில்: "எங்கள் தந்தை முரளியுடன் பிறந்த புருஷோத்தமன் என்பவரின் மகன் கோவிந்தராஜ், அவரது சகோதரி பிரேமா மற்றும் சகோதரியின் கணவர் பாரதிராஜா ஆகிய மூவரும், இதுவரை பாகப்பிரிவினை செய்யப்படாத கூட்டுச் சொத்து தொடர்பாக எங்களிடம் தொடர்ந்து தகராறில் ஈடுபட்டு வந்தனர். இந்த தகராறில் எனது தாய் சாந்தியை அவர்கள் இருமுறை கடுமையாகத் தாக்கியுள்ளனர். இதுகுறித்து கொண்டபாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் வழக்கு நிலுவையிலேயே உள்ளது. இதனிடையே, பொதுக் கிணற்றில் இருந்த மின் மோட்டாரை யாருடனும் கலந்தாலோசிக்காமல் கோவிந்தராஜ் தன்னிச்சையாகக் கழற்றிச் சென்று விற்றுவிட்டார்.

இதைக்தட்டிக்கேட்ட எனது தந்தை முரளியை, கோவிந்தராஜ் உள்ளிட்ட மூவரும் சேர்ந்து கோடாரியால் கோரமாகத் தாக்கினர். அதில் பலத்த காயமடைந்த எனது தந்தை தற்போது வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். மேலும், கடந்தஇரண்டுமாதங்களுக்கு முன்பும் இதே கும்பல் எனது தலையில் கத்தியால் வெட்டித் தாக்குதல் நடத்தியது.

நாங்கள் தொடர்ந்து பலமுறை தாக்குதலுக்கு உள்ளாகியும், (கொண்டபாளையம்) போலீசார் பெயரளவில் மட்டுமே வழக்குப்பதிவு செய்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்ட கோவிந்தராஜ், பாரதிராஜா, பிரேமா ஆகியோர் மீது சட்டரீதியான முறையான விசாரணை நடத்தாமலும், அவர்களைக் கைது செய்யாமலும் காலதாமதம் செய்து வந்தனர். இதனால் விரக்தியடைந்த எனது தாய், நீதி கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளிக்கும் முடிவுக்குத் தள்ளப்பட்டார்." என்று கண்ணீருடன் தெரிவித்தார்.

இச்சம்பவம் குறித்து ராணிப்பேட்டை போலீசார் போலீசார் மேலும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.